செய்தி வெளியீடு எண்: 1020 25.12.2009

## கோவை மாவட்டத்தில் 7 பேரூராட்சிகளில் 22 கோடியே 51 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய்ச் செலவில் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படும்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கோவை மாவட்டத்திலுள்ள கூடலூர் பேரூராட்சியில் 2 கோடியே 22 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; சர்க்கார்சாமக்குளம் பேரூராட்சியில் 1 கோடியே 11 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; செட்டிப்பாளையம் பேரூராட்சியில் 94 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; ஒத்தக்கல்மண்டபம் பேரூராட்சியில் 51 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; திருமலையம்பாளையம் பேரூராட்சியில் 75 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; சாமல்லபுரம் பேரூராட்சியில் 7 கோடியே 20 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும்; கருமாத்தம்பட்டி பேரூராட்சியில் 9 கோடியே 76 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்ச் செலவிலும் என கோவை மாவட்டத்தில் 7 பேரூராட்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்பகுதி அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்தம் 22 கோடியே 51 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்ச் செலவில் குடிநீர் வழங்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

• * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.